
தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 92 | 4 Pages | 31.10.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 92 | 4 பக்கங்கள் | 31.10.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்தின்**
**பகையும் உளவோ பிற**

**விளக்கம்:**
முகமலர்ச்சியும் அகமலர்ச்சியும் கொல்லுகின்ற சினத்தை விட ஒருவனுக்கு பகையானவை வேறு உள்ளனவோ?

## டிரம்ப் நிலையற்றவர்.. பழிவாங்க துடிப்பவர்: இறுதிக்கட்ட பிரசாரத்தில் கமலா ஹாரிஸ் விளாசல்



வாஷிங்டன், அக். 31
அமெரிக்காவில் வரும் 5ம் தேதி ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில், பிரதான வேட்பாளர்களான கமலா ஹாரிஸ் (வயது 60), டொனால்டு டிரம்ப் (வயது 78) ஆகியோர் இறுதிக்கட்ட பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். ஒருவரையொருவர் கடுமையான வார்த்தைகளால் விமர்சனம் செய்வதுடன் வாக்காளர்கள் நல்ல முடிவை எடுக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளனர்.

அவ்வகையில், ஜனநாயக கட்சியின் வேட்பாளரான கமலா ஹாரிஷ் வாஷிங்டன் டி.சி.யில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசியதாவது:

டொனால்ட் டிரம்ப் தனது கருத்திற்கு உடன்படாத அமெரிக்க மக்களுக்கு எதிராக ராணுவத்தை பயன்படுத்த நினைக்கிறார். உள்ளிருந்து வரும் எதிரியாக மக்களை அழைக்கிறார். உங்கள் வாழ்க்கையை எவ்வாறு மேம்படுத்துவது என்று சிந்திக்கும் ஜனாதிபதி வேட்பாளர் அவர் அல்ல. அவர் நிலையற்றவர், பழிவாங்குவதை நோக்கமாக கொண்டவர். இந்த தேர்தலானது சுதந்திரங்கள் வேண்டுமா? அல்லது குழப்பவாதம் மற்றும் பிரிவினைவாதம் வேண்டுமா? என்பதை தேர்ந்தெடுக்கும் தேர்தல்.

அவர் வழக்கு தொடர விரும்பும் எதிரிகளின் பட்டியல் நீளமாக உள்ளது. ஜனவரி 6ம் தேதி அதிகாரிகளை தாக்கிய வன்முறையாளர்களை விடுவிப்பது அவரது முன்னுரிமை திட்டங்களில் ஒன்று என அவரே கூறுகிறார்.

மற்றவர்களை குறைகூறி விரல்களை நீட்டி பேசுவதை நிறுத்திவிட்டு கைகளை கோர்க்க வேண்டிய நேரம் இது. நாடகம் மற்றும் மோதல், பயம் மற்றும் பிரிவினை ஆகியவற்றின் பக்கத்தை திருப்ப வேண்டிய நேரம் இது. அமெரிக்காவில் புதிய தலைமுறை தலைமையேற்கும் நேரம் இது. அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக, அந்த தலைமையை வழங்கி மக்கள் சேவை செய்ய நான் தயாராக இருக்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

## அணு ஆயுதம் தாங்கிய நீர்மூழ்கி கப்பல் கட்டும் தளத்தில் தீ விபத்து அதிர்ச்சி சம்பவம்



லண்டன், அக்.31
இங்கிலாந்து கடற்படையில் அணு ஆயுதம் தாங்கிய நீர்மூழ்கி கப்பல்கள் உள்ளன. இந்தகப்பல்கள் கட்டு தலம் அந்நாடின் கம்பிரியா நகரின் பாரோ இன் பெர்னஸ் என்ற பகுதியில் அமைந்துள்ளது.

இந்நிலையில், கம்பிரியாவில் உள்ள அணு ஆயுதம் தாங்கிய நீர்மூழ்கி கப்பல் கட்டும் தளத்தில் நேற்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இந்த தீ விபத்தில் 2 பேர் காயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த தீயணைப்பு படையினர் கப்பல் கட்டும் தளத்தில் பற்றி எரிந்த தீயை அணைந்தனர். படுகாயமடைந்த 2 பேரும் மீட்கப்பட்டு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், இந்த தீ விபத்தில் அணு கசிவு எதுவும் ஏற்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மீண்டும் தாக்கினால்... ஈரானுக்கு கடும் எச்சரிக்கை விடுத்த இஸ்ரேல்

டெல் அவிவ், அக். 31
இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு கடந்த ஆண்டு அக்டோபரில் கொடூர தாக்குதல் நடத்தியதில், இஸ்ரேல் மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர்.பணயகைதிகளாகசிலர்சிறைபிடித்துசெல்லப்பட்டனர். இதற்கு பதிலடியாக, காசாவை இலக்காக கொண்டு இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் 43 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் பலியாகி உள்ளனர்.

இந்நிலையில், இஸ்ரேல் குடியிருப்புகளை இலக்காக கொண்டு, 200 க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை கொண்டு இந்த மாத தொடக்கத்தில் ஈரான் தாக்குதல் நடத்தியது. நிவேதிம் விமான தளம், நெட்ஜரிம் ராணுவ தளம் மற்றும் டெல் நாப் உளவு பிரிவு ஆகியவற்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்கு இஸ்ரேல் பதிலடி தரும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், மாத இறுதியில், கடந்த சனிக்கிழமையன்று, ஈரானின் ராணுவ இலக்குகள் மற்றும் ராக்கெட் உற்பத்தி தளங்கள் மீது இஸ்ரேலின் போர் விமானங்கள்தாக்குதலைதொடுத்தன. இதற்குஈரான்தரப்பில்உடனடியாக பதில் தாக்குதல் எதுவும் நடத்தப்படவில்லை.

இதுபற்றி இஸ்ரேலின் ராணுவ தலைவர் லெப்டினென்ட் ஜெனரல் ஹெர்ஜி ஹலேவி இன்று கூறும்போது, இஸ்ரேல் மீது மற்றொரு ராக்கெட் தாக்குதலை நடத்தும் தவறை ஈரான் மேற்கொண்டால், பதிலுக்கு ஈரான் மீது மிக, மிக கடுமையாக தாக்குதல் நடத்தப்படும் என எச்சரிக்கை விடுத்து உள்ளார். எங்களுக்கு ஈரானை எப்படி அணுக வேண்டும் என தெரியும். இந்த முறை நாங்கள் மிக திறமையாக ஈரானை அடைந்து, நாங்கள் தாக்காமல் விட்டு வைத்த இடங்களை அதிக திறனுடன் கடுமையாக தாக்குவோம் என்று ராணுவ அதிகாரிகளின் மத்தியில் பேசும்போது குறிப்பிட்டார். ஈரானில் உள்ள சில இடங்களை தாக்குவது ஒத்தி வைக்கப்பட்டு உள்ளது. ஏனெனில், இதன் மீது நாம் மீண்டும் தாக்குதல் நடத்தகூடும். இந்த விசயம் இதனுடன் முடிந்து விடவில்லை. தாக்குதலின் மத்தியிலேயே நாம் இருக்கிறோம் என்று அப்போது அவர் கூறினார்.

# விக்கிரவாண்டி சாலை விபத்தில் உயிரிழந்த காவலர் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிவாரணம்: முதல்அமைச்சர் அறிவிப்பு




சென்னை, அக்.31
முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ளசெய்திக்குறிப்பில், செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்துவந்த சத்தியமூர்த்தி (வயது 27) என்பவர் கடந்த 26.10.2024 அன்று இரவு சுமார் 8.00 மணியளவில் அரசியல் கட்சி ஒன்று நடத்திய மாநாட்டின் பாதுகாப்பு பணிக்காக இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், சென்னைதிருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அய்யூர், அகரம் மேம்பாலம் அருகில் எதிர்பாராதவிதமாக கார் ஒன்று மோதிய விபத்தில் பலத்த காயமடைந்து சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக சென்னை ராஜீவ்காந்தி அரசுப் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இன்று (29.10.2024) உயிரிழந்தார் என்றதுயரமானசெய்தியைக்கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

காவலர் சத்தியமூர்த்தி அவர்களின் மறைவு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். காவலர் திரு.சத்தியமூர்த்தி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றும் காவல் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு 25 லட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். என தெரிவிக்கப்பட்டுள்ளது

# பேராசிரியர் எ.மு.ராஜன் நூல் வெளியீட்டு விழா



புதுச்சேரி, அக். 31
தாகூர் கலைக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் பேராசிரியர் எ. மு..ராஜன் எழுதிய 49 ஆவது நூல் வெளியீட்டு விழா புதுச்சேரி தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது.

தாகூர் கலைக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் பேராசிரியர் எ. மு. ராஜன் இதுவரை 40 நூல்களை எழுதி உள்ளார். அவர் எழுதிய நூல்களில் ஆறு நூல்கள் தமிழ்நாடு அரசு மற்றும் புதுச்சேரி அரசின் விருதுகளைப் பெற்றுள்ளன. புதுச்சேரி அரசின் கலைமாமணி, ஏர் இந்தியா நிறுவனத்தின் (BOLT) சிறந்த ஆசிரியர், இலக்கிய மாமணி, ஹைக்கூ செம்மல், உள்ளிட்ட 14 விருதுகளைப் பெற்றுள்ளார். அதில் ஒன்றான உலகச் சாதனையாளர் விருது நேபாளத்தின் தலைநகர் காத்மாண்டு வில் சி. பி. ஐ. இயக்குனரால் வழங்கப்பட்டது.

இதுவரை 25 நாடுகளுக்கு விழாக்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் மட்டுமல்லாது சுற்றுலாவாகவும் சென்று வந்துள்ளார்.

இவர் 40 ஆண்டு காலம் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றி தாகூர் கலைக் கல்லூரியின் முதல்வராக ஓய்வு பெற்றார். அவர் எழுதிய 49 ஆவது நூலான "இளைஞர்கள் முன்னேற 100 வழிகள்" எனும் நூல் தமிழ் சங்கத்தில் வெளியிடப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் மு.ராமதாஸ் நூலை வெளியிட்டு வாழ்த்திப் பேசினார்.

அருட்திரு ஆ.ச.அந்தோணிசாமி அடிகளார் விழாவுக்குத் தலைமை ஏற்றார்.

திருமலைவாசன் நூலை அறிமுகம் செய்து வைத்தார். பேராசிரியர் எ. மு.ராஜன் மாணவர்கள் காரைக்கால் மாவட்ட ஓய்வு பெற்ற கூடுதல் ஆட்சியர் திரு தினேஷ் மங்கலாட், கலைமாமணி அறிமதி இளம் பரிதி, கலை மாமணி சுந்தர முருகன், திரு ஸ்ரீராம், திரு குலசேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். துபாயில் இருந்து திரு ரகுபதி இணைய வழியில் வாழ்த்துரை வழங்கினார்.

நூலாசிரியரின் குடும்ப உறுப்பினர்கள் அண்ணன்கள் திரு கிருஷ்ணமூர்த்தி திரு சுப்பிரமணியர் திரு ராமச்சந்திரன் தம்பி திரு கந்தசாமி தங்கை திருமதி சரளாதேவி மகள் திருமதி இளவரசி டாக்டர் ஷர்மிளா மகன் திரு இளங்கோ பேத்திகள் லட்சுமி பிரியா, பாரதி பிரியா, சிநேக பிரியா, மற்றும் ரியா ஜெயபாலன் ஆகியோர் நூல்களைப் பெற்றுக்கொண்டனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் டாக்டர் ஷர்மிளா ஜெயபாலன் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் எ. மு. ராஜன் சக கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள், புதுச்சேரி மாநில மக்கள் முன்னேற்றக் கழக நிர்வாகிகள் மற்றும் அவரது உறவினர்களும் நண்பர்களும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## காமன்வெல்த் மாநாடு: சபாநாயகர் அப்பாவு 2ந் தேதி ஆஸ்திரேலியா செல்கிறார்



சென்னை, அக். 31
தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

ஆஸ்திரேலியா நாட்டின்சிட்னி நகரத்தில் நவம்பர் மாதம் 5ந் தேதி முதல் 8ந் தேதிவரை 67வது காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் அப்பாவு கலந்து கொள்கிறார்.

இதற்காக அவர் நவம்பர் 2ந் தேதி (சனிக்கிழமை) அன்று இரவு 11.25 மணிக்கு விமானம் மூலம் சிங்கப்பூருக்கு சென்று அங்கிருந்து மலேசியாநாட்டிற்குச்சென்று, அங்கிருந்து சிட்னி நகரை 5ந் தேதி சென்றடைகின்றனர். இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு அவர் நியூசிலாந்து நாட்டிற்குச் சென்றுவிட்டு, நவம்பர் 17ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) சென்னை திரும்புகிறார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



பொள்ளாச்சி தாலுக்கா உடுமலை சட்டமன்ற தொகுதி சூளேஸ்வரன்பட்டி பேரூராட்சி 7வது வார்டில் தூய்மை பணியாளர்களுக்கு மற்றும் பொதுமக்களுக்கு 30 குடும்பங்களுக்கு 1500 ரூபாய் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை வழங்கி தீபாவளி நல்வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொண்டார். சமூக ஆர்வலர் சமூக சேவகர் முன்னாள் அஞ்சல் துறை அதிகாரி சையத்பாஷா உள்ளனர்.



# போக்குவரத்து ஊழியர்களுக்கு போனஸ் வங்கிக்கணக்கில் செலுத்திய அரசு

சென்னை, அக். 31

தமிழ்நாட்டில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் உள்ளிட்ட பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் சி மற்றும் டி பிரிவு தொழிலாளர்களுக்கு தீபாவளி திருநாளையொட்டி 20% ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 10ந்தேதி அறிவித்திருந்தார்.

இந்நிலையில் போக்குவரத்து ஊழியர்களுக்கான தீபாவளி போனஸ் வங்கிக் கணக்கில் இன்று வரவு வைக்கப்பட்டது.

வங்கிகளுக்கு பட்டியல் அனுப்பப்பட்டு ஊழியர்களின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.


# மக்களின் ஆதரவுக்கு ரொம்ப நன்றி... கவிபாரதி துர்கா

சென்னை, அக்.31

மக்களின் ஆதரவுக்கு ரொம்ப நன்றி... கவிபாரதி துர்காதமிழக வெற்றிக்கழகத்தின் முதல் மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது. ரசிகர்கள், பொதுமக்கள் மற்றும் பலரால் ஆர்வமுடன் எதிர்பார்க்கப்பட்ட மாநாட்டில் தவெக தலைவர் விஜய் தனது கட்சியின் பெயர் மற்றும் கொள்கை குறித்தும் சுமார் 48 நிமிசத்திற்கு தனது முதல் அரசியல் உரையை நிகழ்த்தினார். இந்த மாநாட்டில் சுமார் 8 லட்சத்திற்கும் மேற்பட்டோர் திரண்டுள்ளனர். இந்த மாநாடு தமிழக அரசியல் களத்தில் ஒரு பெரும் அதிர்வை ஏற்படுத்தி உள்ளது.

அனைவராலும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தவெக முதல் மாநாட்டில் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குவது யார் என்று பலரால் எதிர்பார்க்கப்பட்டது. மாநாட்டை விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த கவி பாரதி துர்கா என்பவர் தொகுத்து வழங்கி இருந்தார். இதனிடையே மாநாட்டை தொகுத்து வழங்கிய துர்கா தேவி குறித்து சமூக வலைதளங்களில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.


இந்த நிலையில், மக்களின் ஆதரவுக்கு ரொம்ப நன்றி என்று கவிபாரதி துர்கா வீடியோ ஒன்றை



சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

தமிழுக்கும், தமிழர்களுக்கும் வணக்கம். நான் தான் உங்க கவிபாரதி துர்கா. தவெக முதல் மாநில மாநாட்டின் தொகுப்பாளினி நான் தான். இந்த பெரிய மேடையை எனக்கு கொடுத்த தவெக தலைவருக்கும், பொதுச்செயலாளருக்கும் ரொம்ப கடமைப்பட்டுள்ளேன். என்னோட நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மக்களோட ஆதரவுக்கு ரொம்ப ரொம்ப நன்றி. இந்த மாதிரி சப்போர்ட் தான் என்னை மாதிரி ஒரு சாமானிய பெண்ணுக்கு உத்வேகமாக இருக்கும் என்பதில் எந்தவிதஜயமும்இல்லை. ரொம்ப நன்றிங்க... நான் எதிர்பார்க்காத அளவுக்கு எனக்கு நிறைய சப்போர்ட் கிடைத்திருக்கு... ரொம்ப ரொம்ப நன்றி. ப்ளீஸ் சப்போர்ட் மீ என்று கூறினார்.

# நிதி நிறுவன மோசடி வழக்கு... தேவநாதன் யாதவுக்கு ஜாமின் வழங்க நீதிபதி மறுப்பு



சென்னை, அக். 31

சென்னை மயிலாப்பூரில் இந்து நிதி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இதன் நிர்வாக இயக்குநராக இந்திய மக்கள் கல்வி முன்னேற்ற கட்சியின் நிறுவனர் தேவநாதன் யாதவ் இருக்கிறார். இவர் நடந்து முடிந்த பாராளுமன்ற தோ்தலில் சிவகங்கை தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிட்டு தோல்வி அடைந்திருந்தார்.

இதற்கிடையே நிதி நிறுவனம்சார்பில்அதிகவட்டி தருவதாக வாடிக்கையாளர்களிடம் தேவநாதன் யாதவ் பணம் பெற்றதாகவும், அவற்றை மோசடி செய்துவிட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. பலரும் லட்சக்கணக்கில் பணத்தை அந்நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளனா். ஆனால் பல மாதங்கள் கடந்தும் வாடிக்கையாளா்களுக்கு வைப்புத் தொகையோ அல்து வட்டியோ எதுவும் கொடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது.

இதனை தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்கள் புகார் அளித்ததை தொடர்ந்து சென்னை பொருளாதாரகுற்றப்பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து தலைமறைவாக இருந்த தேவநாதன் யாதவ் உள்ளிட்ட 6 பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர். அவர்களிடம் பண மோசடி குறித்து தீவிர விசாரணை நடைபெற்று வரும் நிலையில் இந்த வழக்கில் தனக்கு ஜாமின் வழங்க கோரி தேவநாதன் யாதவ் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி தனபால், நிதி நிறுவன மோசடி வழக்கில் தேவநாதன்யாதவுக்கு ஜாமின் வழங்க முடியாது என கூறி ஜாமின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# ஒன்றிணைந்து செயல்படுவோம்.. அஜித்குமாருக்கு வாழ்த்து தெரிவித்த உதயநிதி ஸ்டாலின்

சென்னை, அக். 31

தமிழ் திரையுலகில் தனக்கென தனி இடத்தைப் பிடித்துள்ள நடிகர் அஜித், 15 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கார் ரேசிங்கில்கலந்துகொள்ள உள்ளார். இதன்படி துபாயில் நடைபெற உள்ள ஜி.டி.3 கோப்பை கார் பந்தய போட்டிகளில் அஜித் பங்கேற்க இருக்கிறார். இதற்காக, அஜித் பயிற்சி எடுக்கும் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

அஜித்குமார் ரேசிங் என்ற பெயரில் தனியாக ஒரு அணியை நிர்வகித்து வரும் நடிகர் அஜித்குமார் அந்த அணி சார்பில் Fabian Duffieuxwillஐ அதிகாரப்பூர்வ ஓட்டுநராக அறிவித்தார். கடந்த 2004ம் ஆண்டு F3 கார்பந்தயத்திலும், 2010ம் ஆண்டு பார்முலா 2 கார்பந்தயத்திலும் அஜித் பங்கேற்றார். அண்மையில் நெதர்லாந்தைச் சேர்ந்த ரேஸ் வீரர்களுக்கான ஆடை



தயாரிக்கும் நிறுவன அதிகாரிகளுடன் அஜித் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்நிலையில் துபாயில் நடைபெற உள்ள ஜி.டி.3 கோப்பை கார் பந்தய போட்டிகளில் பங்கேற்க இருக்கும் அஜித்குமாருக்கு தமிழ்நாடு துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

உலக அளவில் சிறப்புக்குரிய 24HDubai 2025 & The European 24H Series Championship Porsche 992 GT3 Cup Class கார் பந்தயத்தில் பங்கேற்கவுள்ள நடிகரும், நண்பருமான அஜித்குமார் சாருக்கு எங்களுடைய மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழகத்தின் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) லோகோவை 'அஜித்குமார் ரேசிங்' யூனிட்டின், கார், ஹெல்மெட் மற்றும் பந்தயம் தொடர்பான உபகரணங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தோம்.

இதன்மூலம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத்துறையை உலக அரங்கில் பெருமைப்படுத்தி, ஊக்குவித்துள்ள அஜித் சாருக்கு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் , Formula4 Chennai Racing Street Circuit போன்ற முன்னெடுப்புகளை வாழ்த்திய அஜித் சாருக்கு எங்கள் அன்பும், நன்றியும். விளையாட்டுத்துறையில் தமிழ்நாட்டை உலக அரங்கில் உயர்த்திட ஒன்றிணைந்து செயல்படுவோம். கார்பந்தய போட்டியில் வென்று தமிழ்நாட்டுக்கு நீங்கள் பெருமைசேர்த்திட வாழ்த்துகள் அஜித் சார்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'இளைய தலைமுறைக்கான பல்வேறு வாய்ப்புகளை மோடி அரசு வழங்குகிறது' எல்.முருகன்

சென்னை, அக் .31

நாடு முழுவதும் அரசு துறைகள் மற்றும் நிறுவனங்களுக்காக தேர்வு செய்யப்பட்ட 51,000 பேருக்கு பணி நியமண ஆணைகள் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. அதன்படி, சென்னை ஐ.சி.எப். அம்பேத்கர் கூட்ட அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய அரசின் 6 துறைகளில் தேர்வு செய்யப்பட்ட 150 இளைஞர்களுக்கு, பணி நியமன ஆணைகளை மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணை மந்திரி எல்.முருகன் வழங்கினார்.




இந்த நிகழ்ச்சியில் பேசிய எல்.முருகன், "புதிய இந்தியாவை உருவாக்குவதில் இளைஞர்களின் பங்கு அதிகரிக்க வேண்டும். இளைய தலைமுறைக்கான பல்வேறு வாய்ப்புகளை மோடி அரசு வழங்குகிறது. அரசு துறைகளில் மட்டுமின்றி, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், திறன் மேம்பாட்டிலும் இளைஞர்களுக்கு பிரதமர் மோடி பல்வேறு வாய்ப்புகளை உருவாக்கியுள்ளார்" என்று தெரிவித்தார்.

# முதல்வர் படைப்பகம்: மாநில அரசின் நிதியில் உருவாகும் திட்டம்: உண்மை சரிபார்ப்புக்குழு விளக்கம்

சென்னை, அக்.31

தமிழக அரசு அறிவித்துள்ள 'முதல்வர் படைப்பகம்' என்ற திட்டம் மத்திய அரசின் திட்டம் என்று சமூக வலைதளங்களில் தகவல் பரப்பப்படுகிறது. இது திரிக்கப்பட்ட தகவல் என்று தமிழக அரசின் உண்மை சரிபார்ப்புக்குழு விளக்கம் அளித்துள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள 'முதல்வர் படைப்பகம்' மத்திய அரசின் திட்டம் என்று ஒரு தகவல் சமூக வலைதளங்களில் பரப்பப்படுகிறது. இது திரிக்கப்பட்ட தகவல். 'முதல்வர் படைப்பகம்' முதல்அமைச்சரின் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி, சிஎம்டிஏ மற்றும் சென்னைமாநகராட்சி நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பல்வேறு தொழில் முனைவோர் ஒரே இடத்தில் பணிபுரியும் Co WorkingSpaceதளம், படிப்பதற்கு சென்னை கொளத்தூரில் ஒரு தளம், உணவு உண்பதற்கு ஒரு தளம் கட்டடப்பட்டுள்ளது.

பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள Co Working space திட்டம் என்பது மத்திய அரசின் Startup India மற்றும் தமிழ்நாடு அரசின் TN Start up திட்டங்களின் நிதியுதவியுடன் தனியார் நிறுவனங்களால் நடத்தப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாநாட்டுக்கு வந்தபோது சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களுக்கு த.வெ.க. தலைவர் விஜய் இரங்கல்

சென்னை, அக்.31

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

நமது தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாட்டில் பங்கேற்பதற்காக, விக்கிரவாண்டி வி. சாலை நோக்கி வரும் போது, எதிர்பாராமல் நிகழ்ந்த சாலை விபத்துகளில் உயிரிழந்த திருச்சி தெற்கு மாவட்ட இளைஞரணித் தலைவர் சீனிவாசன், திருச்சி தெற்கு மாவட்ட துணைத் தலைவர் விஜய்கலை, கழகத் தோழர்கள் வசந்தகுமார், ரியாஸ், உதயகுமார், சார்லஸ் ஆகியோர் இன்று நம்மிடையே இல்லை என்பது அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது. ஈடு செய்யவே இயலாத, தாங்கொணா இத்துயரில் இருந்து வெளிவரவே இயலாமல் மனம் தவிக்கிறது.

கழகத்திற்காக இவர்கள் ஆற்றிய பணிகள் கழக வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும். கழகத் தோழர்களை இழந்து வாடும்குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனிடம் வேண்டுகிறேன்.

மேலும், சாலை விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெறும் கழகத் தோழர்கள் விரைவில் முழுவதும் குணமடைந்து, வீடு திரும்ப எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# டி.என்.பி.எஸ்.சி. குரூப் 4 தேர்வு: காலிப் பணியிடங்கள் மேலும் அதிகரிப்பு

சென்னை, அக்.31

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைச்சு பணிகள், வாரியங்கள், வனப் பணி மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் காலியாக உள்ள நான்காம் நிலை பணியிடங்களைநிரப்புவதற்கான குரூப் 4 தேர்வை கடந்த ஜூன் 9ம் தேதி நடத்தியது.

இதில் பங்கேற்க 20 லட்சம் பேர் விண்ணப்பித்த நிலையில், 7 ஆயிரத்து 247 மையங்களில் 15 லட்சத்து 80 ஆயிரம் பேர் தேர்வு எழுதினர். இதனிடையே, பல்வேறு தரப்பில் இருந்து எழுந்த கோரிக்கைகளின் அடிப்படையில், கூடுதலாக 480 பணியிடங்கள் சேர்க்கப்பட்டு காலியிடங்களின் எண்ணிக்கை 6 ஆயிரத்து 724 ஆக உயர்த்தப்பட்டது.




இரண்டாவது கட்டமாக 2 ஆயிரத்து 208 பணியிடங்கள் சேர்க்கப்பட்டு, 8 ஆயிரத்து 932 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட இருந்தன.

இந்த நிலையில், குரூப்4 தேர்வு முடிவுகள் இன்று வெளியாகியுள்ளது. இன்று காலை தேர்வாணையத்தின் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் முடிந்த சில மணி நேரத்தில் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. குரூப்4தேர்வுமுடிவுகளை tnpscresults.tn.gov.in, tnpscexams.in ஆகிய இணையதளங்களில் அறிந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே குரூப் 4 தேர்வு முடிவுகள் வெளியான சில மணி நேரங்களிலேயே காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையை அதிகரித்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அதன்படி ஏற்கனவே இருந்த 8 ஆயிரத்து 932 காலிப் பணியிடங்களுடன் கூடுதலாக 559 இடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை 9, 491 ஆக அதிகரித்துள்ளது. குரூப் 4 பணியிடங்களை அதிகரிக்க வேண்டும் என பல்வேறு தரப்பினர் கோரிக்கை வைத்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.2 லட்சம் நிதியுதவி: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, அக்.31

திருவாரூர் மாவட்டம், ஓடாச்சேரி கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.2 லட்சம் நிதியுதவி வழங்கிட முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

திருவாரூர் மாவட்டம் மற்றும் வட்டம், கல்லிக்குடி வருவாய் கிராமம், வடக்குவெளியைச் சேர்ந்த அஜித்குமார் (வயது 27) த/பெ.மகிமைதாஸ் என்பவர் நேற்று (27.10.2024) ஓடாச்சேரி கிராமத்திலுள்ள மின்மாற்றியில் பழுதுபார்க்கும் பணியை மேற்கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி, மயக்கமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.




மேலும், இவ்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு இரண்டு லட்சம் ரூபாய் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாத்தையாறு அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட அரசு உத்தரவு

மதுரை, அக். 31

பாலமேடு அருகே உள்ள சாத்தையாறு அணை 29 அடி கொள்ளளவு கொண்டதாகும். கடந்த சில நாட்களாக மதுரையில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக சாத்தையாறு அணை முழுவதுமாக நிரம்பி மறுகால் பாய்ந்து வருகிறது. இந்த நிலையில் சாத்தையாறு அணையிலிருந்து இன்று முதல் 18 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சாத்தையாறு அணை முறை சார்ந்த கண்மாய்களுக்கு 28.10.2024 முதல் விநாடிக்கு 25 கனஅடி வீதம் தொடர்ந்து 18 நாட்களுக்கு சாத்தையாறு அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது.

இதன் மூலம் மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சாத்தையாறு அணை முறை சார்ந்த கண்மாய்களின் கீழ் உள்ள 1,499.59 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டு வீரர் , வீராங்கனைகளுக்கு நிதியுதவி: உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, அக்.31

துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர் வீராங்கனையர் உலகெங்கும் சென்று வெற்றிகளை குவித்திட பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்ற நோக்கில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை நம்முடைய முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அந்த அறக்கட்டளை மூலம் தொடர்ந்து ஏராளமான வீரர் வீராங்கனையர் பயன்பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், சீனாவில் வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள 4வது உலக ஜூனியர் சாப்ட் டென்னிஸ் போட்டியில் பங்கேற்கவுள்ள 24 தமிழ்நாட்டு வீரர், வீராங்கனையருக்கு விமானப்பயணம் தங்குமிடம் போட்டிக்கான நுழைவுக்கட்டணம் உள்ளிட்ட செலவினங்களுக்காக தலா ரூ.1 லட்சம் வீதம், மொத்தம் ரூ.24 லட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டது அனைவரும் சாதனை படைத்து இந்திய ஒன்றியத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்திட வாழ்த்தினோம். என தெரிவித்துள்ளார் .

# மேலப்பாளையம் ஆட்டுச்சந்தையில் ஒரே நாளில் ரூ.3 கோடிக்கு ஆடுகள் விற்பனை



நெல்லை, அக். 31

தீபாவளி பண்டிகை நாளை மறுநாள் (வியாழக்கிழமை) கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் மக்கள் வீடுகளில் அசைவ உணவுகள்சமைத்து சாப்பிடுவது வழக்கம்.

எனவே சந்தைகளில் ஆடுகள் விற்பனை களை கட்டியுள்ளது. அதன்படி நெல்லை மேலப்பாளையம் ஆட்டுச் சந்தையில் தீபாவளி விற்பனை படு ஜோராக நடந்தது. வியாபாரிகள் ஆடுகளை ரூ.6 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை விற்றுச் சென்றனர். செவ்வாய்கிழமை தோறும் நடக்கும் மேலப்பாளையம் ஆட்டுச்சந்தையில் இன்று அதிகாலை முதலே தீபாவளி பண்டிகைக்கான விற்பனை களைக்கட்டியது.

இறைச்சிக்காக ஆடுகளை கொண்டு செல்வோர் மொத்தமாக 8 முதல் 10 ஆடுகளை விலைபேசி வாங்கி சென்றனர். நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மட்டுமல்லாமல் தேனி, மதுரை மற்றும் கேரளா வியாபாரிகளும் வந்திருந்தனர். ஏராளமான வியாபாரிகள் சந்தைக்கு வந்திருந்தனர். இதனால் அதிகாலையில் தொடங்கி 10 மணி வரையிலும் மேலப்பாளையம் ரவுண்டானா வரை கடுமையான போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது.

ஆடுகளை சந்தைக்குள் கொண்டு செல்ல மாநகராட்சி தரப்பில் இருந்து சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட டோக்கன் கள் விநியோகிக்கப்பட்டன. ஆடுகளை வாங்குவதற்காக பொதுமக்களும், கறிக்கடைக்காரர்களும் குவிந்தனர். செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் என இருவகை ஆடுகளை வியாபாரிகள் கொண்டு வந்திருந்தாலும், இறைச்சிக்காக வெளியூருக்கு கொண்டு செல்லும் வியாபாரிகள் செம்மறியாடுகளை அதிகம் வாங்கி சென்றனர். கிராமப்புறங்களில் இருந்து வருவோர் வெள்ளாடுகளை வாங்குவதிலேயே விருப்பம் காட்டினர். ஆட்டின் உயரம், எடையை பொறுத்து விலை நிர்ணயிக்கப்பட்டது. ஒரு ஆடு ரூ.6 ஆயிரத்தில் இருந்து ரூ.25 ஆயிரம் வரை விலை போனது.

மேலப்பாளையம் கால்நடை சந்தையில் இன்று சுமார் ரூ.3 கோடி வரை விற்பனை இருந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

# சிறுமியை திருமணம் செய்த வாலிபர் போக்சோ சட்டத்தில் கைது

திருச்செங்கோடு, அக். 31

நாமக்கல் மாவட்டம் வெண்ணந்தூர் சவுதாபுரம் ஓலப்பட்டி பகுதியை சேர்ந்தவர் பிரகாஷ் (வயது 23). வெல்டிங் தொழிலாளி. இவர் காளிப்பட்டி சின்ன பூசாரி காடு பகுதியை சேர்ந்த 16 வயது சிறுமியிடம் ஆசை வார்த்தை கூறி கடந்த பிப்ரவரி மாதம் திருமணம் செய்து கொண்டு அவரை வெளியூருக்கு அழைத்து சென்றார்.

இது குறித்த புகாரின்பேரில் மல்லசமுத்திரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து இருவரையும் தேடி வந்தனர். இந்த நிலையில் தலைமறைவாக இருந்த பிரகாஷை நேற்று போலீசார் அதிரடியாக கைது செய்து சிறுமியை மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

மேலும் போலீசார் பிரகாஷ் மீது போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் போலீசார் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சேலம் மத்திய சிறையில் அடைத்தனர்.

# இரணியல் அருகே கோழி கழிவுகளை ஏற்றி வந்த வாகனம் சிறைபிடிப்பு: பொதுமக்கள் போராட்டம்



இரணியல், அக். 31

கேரளாவில் இருந்து கோழி கழிவுகள், மருத்துவ கழிவுகள் லாரிகளில் ஏற்றி கொண்டு வரப்பட்டு குமரி மாவட்டத்தில் பல்வேறுபகுதிகளில்கொட்டி செல்லும் சம்பவங்கள் அடிக்கடி நடந்து வருகிறது. இந்த நிலையில் நேற்று இரவு கேரளா மாநிலம் பாறசாலையில் இருந்து டெம்போ குமரி மாவட்டத்திற்கு வந்தது. அந்த டெம்போ வரும் போது சாலை முழுவதும் நீர் வடிந்தவாறு சென்றது. அந்த டெம்போ செல்லும்போது அப்பகுதியில் துர்நாற்றம் வீசியது. இதையடுத்து அந்த டெம்போவை வாலிபர்கள் சிலர் பின் தொடர்ந்து துரத்தி சென்றனர். இரணியல் அருகே வில்லுக்குறி பாலம் பகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் பொது மக்களுடன் சேர்ந்து அந்த டெம்போவை சிறை பிடித்தனர்.

இது குறித்த தகவல் பரவியதும் அங்கு ஏராளமான மக்கள் குவிந்தனர். அதே போன்று நாம் தமிழர் கட்சியினரும் அங்கு திரண்டனர். தகவல் அறிந்து வந்த இரணியல் போலீசார், வில்லுக்குறி பேரூராட்சி செயல் அலுவலர் ராமு ஆகியோர் பேச்சு வார்த்தை நடத்தினர். களியக்காவிளை சோதனை சாவடியை தாண்டியே இந்த கழிவு ஏற்றி வரும் லாரிகள் வருகிறது. அங்குள்ள சோதனை சாவடியில் உள்ள போலீசார் ஏன் இதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை? எனவும் பொதுமக்கள் கேள்வி எழுப்பினர். தொடர்ந்து கழிவு ஏற்றி வந்த டெம்போவிற்கு பேரூராட்சி நிர்வாகம் அபராதம் விதித்து, டெம்போவை களியக்காவிளை தாண்டி கேரளாவில் கொண்டுவிட வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்.

இதனால் கோழி கழிவுகளுடன் வில்லுக்குறி தேசிய நெடுஞ்சாலையோரம் டெம்போ நிறுத்தி வைக்கப்பட்டது. இதனால் அப்பகுதியில் இரவு முழுவதும் துர்நாற்றம் வீசியது. இதனிடையே டெம்போவிற்கு அபராதம் விதிக்க வேண்டும். கோழி கழிவுகளுடன் டெம்போவை குமரி எல்லை தாண்டி கேரளாவில் கொண்டுவிட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி நாம் தமிழர் கட்சியினர் விடிய விடிய அப்பகுதியில் போராட்டம் நடத்தினர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# தீபாவளி பண்டிகை விடுமுறை சொந்த ஊர்களுக்கு படையெடுத்து செல்லும் வடமாநில தொழிலாளர்கள்



திருப்பூர், அக்.31

பின்னலாடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி சார்ந்த பல்லாயிரக்கணக்கான நிறுவனங்கள் திருப்பூரில் செயல்பட்டு வருகின்றது. இதற்காக திருப்பூர் மாவட்டம் மட்டுமல்லாது தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் , குஜராத் , பீகார் , ஒடிசா, மேற்கு வங்கம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வந்து தங்கி பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்கள் பெரும்பாலும் பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்று உறவினர்களுடன் பண்டிகையை கொண்டாடுவது வழக்கம். நாளை மறுதினம் தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட உள்ளது. இதற்காக திருப்பூரில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு கடந்த வாரம் முதல் போனஸ் தொகை பட்டுவாடா செய்யப்பட்டது. தொடர்ந்து நிறுவனங்களும் விடுமுறை அளிக்கப்பட்டு வரக்கூடிய நிலையில் திருப்பூரில் இருந்து வட மாநிலங்களுக்கு செல்லும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இதன் காரணமாக ரெயில் நிலையங்களில் வழக்கத்தை விட கூட்ட நெரிசல் ஏற்பட்டுள்ளது. எர்ணாகுளத்தில் இருந்து டாடாநகர் செல்லும் ரெயிலில் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான பயணிகள் பயணித்தனர்.

போதிய இடவசதி இல்லாத காரணத்தால் பயணிகள் ரெயில் படிக்கட்டில் நின்றவாறும் , ரிசர்வ் செய்யப்படாத பெட்டிகளில் நின்றும் பயணம் மேற்கொண்டனர். திருப்பூர் ரெயில் நிலையத்தில் 2 நிமிடம் மட்டுமே ரெயில் நின்று செல்வதால் ஒரே நேரத்தில் பயணிகள் ஏறுவதில் சிரமம் ஏற்பட்டது. சிறப்பு ரெயில்கள் இன்றும் நாளையும் இயக்கப்பட உள்ள நிலையில் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதன் காரணமாகவும், கோவையிலேயே அதிக பயணிகள் ஏறி விடுவதால் திருப்பூர் வரும்போது பெட்டிகள் நிரம்பி விடுவதால் திருப்பூரில் இருக்கின்ற வடமாநில தொழிலாளர்கள் நின்று கொண்டு பயணிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே வட மாநிலங்களுக்கு செல்லும் ரெயிலில் ரிசர்வ் செய்யப்படாத பெட்டிகளை அதிகளவில் இணைக்க வேண்டும் என பயணிகள் வலியுறுத்துகின்றனர்.

# பள்ளி மாணவியை மிரட்டி பணம் பறித்த போலீஸ்காரர் கைது

நெல்லை, அக். 31

நெல்லை மாவட்டம் களக்காடு அருகே உள்ள சிதம்பராபுரத்தை சேர்ந்தவர் ஆனந்த கலைச்செல்வன் (வயது 35). இவர் ஏர்வாடி போலீஸ்நிலையத்தில் போலீஸ்காரராக பணியாற்றி வருகிறார். இவர் தற்போது பாளையங்கோட்டை கே.டி.சி. நகர் பகுதியில் குடும்பத்துடன் வசித்து வருகிறார்.

இவருக்கும், பாளையங்கோட்டையை சேர்ந்த பிளஸ்2 படிக்கும் 17 வயது மாணவிக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து ஆனந்த கலைச்செல்வன் அந்த மாணவியின் வீட்டுக்கு சென்று அவரது பெற்றோருடன் சகஜமாக பழகி வந்துள்ளார். மாணவி வீட்டில் தனியாக இருக்கும்போது அங்கு செல்லும் ஆனந்த கலைச்செல்வன், ஆபாசமாக பேசி வந்துள்ளார். பாலியல் ரீதியில் அந்த மாணவியிடம் பேசி, ஏமாற்றி வந்துள்ளார்.

ஒரு கட்டத்தில் அந்த மாணவி குறித்த வீடியோக்களை தனக்கு வாட்ஸ்அப் மூலமாக அனுப்ப சொல்லி உள்ளார். மாணவியும் அந்தரங்க வீடியோக்களை போலீஸ்காரருக்கு அனுப்பி உள்ளார்.

அந்த மாணவி வசதியான வீட்டை சேர்ந்தவர் என்பதால், அந்த வீடியோக்களை வைத்துக்கொண்டு ஆனந்த கலைச்செல்வன் அந்த மாணவியை அடிக்கடி மிரட்டி பணம் கேட்டு வந்துள்ளார்.

முதலில் வேறு வழியின்றி பெற்றோருக்கு தெரியாமல் பணத்தை கொடுத்து வந்த மாணவி, ஒருகட்டத்தில் ஆனந்த கலைச்செல்வனின் தொந்தரவு தாங்க முடியாமல்தனது பெற்றோரிடம் நடந்த சம்பவங்களை தெரிவித்தார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த மாணவியின் பெற்றோர், பாளையங்கோட்டை அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தனர். இன்ஸ்பெக்டர் ஜெயலட்சுமி தீவிர விசாரணை நடத்தி வந்தார். இதில் மாணவியை பாலியல் ரீதியில் தொந்தரவு செய்த உறுதியானது. மேலும் மிரட்டி பணம் பறித்ததும் தெரிய வந்தது.

இதையடுத்து ஆனந்த கலைச்செல்வன் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர். பின்னர்நேற்று இரவு ஆனந்த கலைச்செல்வனை கைது செய்ய, போலீசார் கே.டி.சி. நகரில் உள்ள அவரது வீட்டுக்கு சென்றனர். அப்போது அவர் ஏர்வாடி போலீஸ் நிலையத்தில் இரவு பணிக்கு சென்றுவிட்டது தெரியவந்தது. இதையடுத்து அங்கு விரைந்து சென்ற போலீசார், ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆனந்த கலைச்செல்வனை கைது செய்தனர்.

# தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விமான கட்டணம் 2 மடங்கு அதிகரிப்பு



ஆலந்தூர், அக். 31

தீபாவளி பண்டிகையொட்டி சென்னையில் இருந்து மதுரை, திருச்சி, தூத்துக்குடி, கோவை செல்லும்ஏராளமானோர்விமான பயணத்தை தேர்வு செய்து உள்ளனர்.

இதன் காரணமாக உள்நாட்டு விமான முனையத்தில் பயணிகள் கூட்டம் வழக்கத்தை விட அலைமோதுகிறது. இதனால் தூத்துக்குடி, மதுரை, திருச்சி, கோவை, சேலம் விமான கட்டணங்கள் 2 மடங்கு அதிகரித்து உள்ளன.

சென்னைதூத்துக்குடிக்கு சாதாரணநாட்களில்விமான கட்டணம் ரூ.4,109 ஆகும். இன்று விமான கட்டணம் ரூ.8,976 முதல் ரூ.13,317 வரை உள்ளது. இதேபோல் மதுரைக்கு ரூ.11,749 முதல் ரூ. 17,745 வரையும், திருச்சிக்கு ரூ.8,211 முதல் ரூ.10,556 வரையும், கோவைக்கு ரூ.7,872 முதல் ரூ.13,428 வரையும், சேலத்திற்கு ரூ.8,353 முதல், ரூ.10,867 வரையும் கட்டணமாக உள்ளது. தீபாவளிக்கு முந்தைய தினம் என்பதால்,

விமான கட்டணங்கள் மேலும் அதிகரிக்கும் என்று தெரிகிறது.

இதைப்போல் திருவனந்தபுரம், கொச்சி, ஐதராபாத் ,டெல்லி, கொல்கத்தா மற்றும் அந்தமான் ஆகிய இடங்களுக்கு செல்லும் விமான கட்டணங்களும் உயர்ந்து உள்ளன.

# காரில் குட்கா கடத்திய வடமாநில வாலிபர்கள் 2 பேர் கைது: ரூ.5 லட்சம் மதிப்புள்ள குட்கா பறிமுதல்

துறையூர், அக். 31

சேலம் மாவட்டம் தம்மம்பட்டி பகுதியில் இருந்து காரில் குட்கா கடத்தி வருவதாக துறையூர் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனை அடுத்து துறையூர் போலீசார் கோவிந்தாபுரம் பிரிவு சாலை அருகே வாகன சோதனை மேற்கொண்டனர். அப்பொழுது அந்த வழியாக வந்த காரை நிறுத்துமாறு கூறினர். ஆனால்காரில் இருந்த மர்மநபர்கள் காரினை நிறுத்தாமல், வேகமாக துறையூர் நோக்கி சென்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து காரினை துரத்திச்சென்ற துறையூர் போலீசார் பாலக்கரை பகுதியில் காரினை மடக்கி பிடித்தனர். பின்னர் காரில் இருந்தவர்களை காவல் நிலையம் அழைத்து சென்று போலீசார் விசாரணை நடத்தினர். இதில், அவர்கள் ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த ராமாராம் தேவவாசி (வயது 38), மனோகர் சேசன் (29) என்பதும், அவர்கள் இருவரும் பெங்களூரில் இருந்து குட்கா பொருட்களை திருச்சிக்கு கடத்தி சென்றதும் தெரியவந்தது. இதனை அடுத்து 2 பேரையும் போலீசார் கைது செய்தனர். கார் மற்றும் காரினுள் இருந்த சுமார் ரூ.5 லட்சம் மதிப்புள்ள 575 கிலோ எடையுள்ள குட்கா பொருட்களை பறிமுதல் செய்தனர். துறையூரில் ஒரே நாளில் சுமார் ஐந்து லட்சம் மதிப்புள்ள குட்கா பொருள்கள் போலீசாரால் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலை தொழிலாளர்களுக்கு போனஸ் அறிவிப்பு

சென்னை, அக்.31

தமிழ்நாடு சர்க்கரைத் துறை இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் உள்ளன. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் 20232024 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் மற்றும் கருணை தொகை வழங்க ஆணையிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில் ஒதுக்கீட்டு உபரி உள்ள சுப்ரமணிய சிவா மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய இரு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கும் மிகை ஊதியமாக 8.33 சதவீதம் மற்றும் கருணை தொகையாக 11.67 சதவீதம் என மொத்தம் 20 சதவீதம் போனஸ் வழங்கவும், மீதமுள்ள 14 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு மிகை ஊதியமாக 8.33 சதவீதம் மற்றும் கருணை தொகையாக 1.67 சதவீதம் என மொத்தம் 10 சதவீதம் போனஸ் வழங்கவும் ஆணையிட்டுள்ளார்.

இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 16 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் சுமார் 5,775 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்பெறுவர். மேலும், மிகை ஊதியம் மற்றும் கருணை தொகை வழங்க ரூ.411.90 லட்சங்கள் செலவினம் ஏற்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கள்ளக்காதலனுடன் சேர்ந்து கணவர் கழுத்தை அறுத்துக் கொன்ற மனைவி

அலங்காநல்லூர், அக். 31

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர், கரட்டு காலனியை சேர்ந்தவர் சரவணன் (வயது 30). செங்கல்சூளை காளவாசலில் சுமை தூக்கும் தொழிலாளியாக வேலை பார்த்து வந்தார். இவருக்கு திருமணமாகி ஜோதிகா (23) என்ற மனைவியும், 6 வயதில் ஒரு மகனும், 4 வயதில் ஒரு மகளும் உள்ளனர்.

அலங்காநல்லூர் அருகேயுள்ளவலசைகிராமத்தைச் சேர்ந்தவர் உடப்பன் (19). கட்டிட தொழிலாளியான இவர் டைல்ஸ் கல் பதிக்கும் வேலை செய்து வருகிறார். செங்கற்சூளைக்கு கணவருக்கு சாப்பாடு கொடுக்க சென்று வரும் போது உடப்பனை பார்த்துள்ளார். அப்போது முதல் அவர்களுக்கிடையே பழக்கம் ஏற்பட்டு காலப்போக்கில் அதுவே கள்ளக்காதலாக மாறியது.

இதனால் ஜோதிகா கணவர் வேலைக்கு சென்றதும், பிள்ளைகளை பள்ளி மற்றும் அங்கன்வாடிக்கு அனுப்பி வைத்துவிட்டு கள்ளக்காதலனை வீட்டிற்கே வரவழைத்து உல்லாசம் அனுபவித்து வந்துள்ளார். சுமார் ஓராண்டுக்கும் மேலாக கணவரின் கண்களில் மண்ணை தூவிவிட்டு கள்ளக்காதலனுடன் சல்லாபத்தில் இருந்த ஜோதிகா கணவரையும், குழந்தைகளையும் வெறுக்க தொடங்கினார்.

கண்ணை மறைத்த கள்ளக்காதலால் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு ஜோதிகா தனது இரண்டு குழந்தைகளையும் தவிக்க விட்டுவிட்டு உடப்பனுடன் வீட்டை விட்டு ஓடி விட்டார். அதன்பிறகே மனைவியின் தகாத உறவு கணவர் சரவணனுக்கு தெரியவந்தது. குழந்தைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவர்கள் மேலான அக்கறையில் ஜோதிகா திரும்பி வந்தால் ஏற்றுக்கொள்ளவும் சரவணன் தயாராக இருந்தார்.

அதன்பேரில் இருவீட்டாரின் உறவினர்களும் பல்வேறு இடங்களில் தேடிப்பிடித்து ஒருவழியாக ஜோதிகாவை சமரசம் பேசி அழைத்து வந்தனர். கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு கணவர் சரவணனுடன் ஜோதிகாவை சேர்த்து வைத்து குழந்தைகளுக்காக பொறுப்புடன் குடும்பம் நடத்துமாறு ஜோதிகாவுக்கு அறிவுரையும் கூறிச்சென்றனர்.

என்னதான் மனைவி திரும்பி வந்தாலும், கள்ளக்காதலனுடன் அவர் சென்றது சரவணனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. இதற்கிடையே ஜோதிகா மனம் திருந்தி வந்ததாக அவர் கூறினாலும், தொடர்ந்து உடப்பனுடன் தொடர்பில் இருந்து வந்தார். இதனை சரவணன் கடுமையாக கண்டித்துள்ளார். இது ஜோதிகாவுக்குகோபத்தை ஏற்படுத்தியது. கணவருடன் குடும்பம் நடத்தும் வரை கள்ளக்காதலனுடன் உல்லாசம் அனுபவிக்க முடியாது என்ற நினைத்த ஜோதிகாஅவரைகொலை செய்ய சதித்திட்டம் தீட்டினார். இதற்காக கள்ளக்காதலனுடன் சேர்ந்து பக்காவாக ஸ்கெட்ச் போட்டுக் கொடுத்த ஜோதிகா நிறைவேற்றினார். அதன்படி இன்று அதிகாலையில் ஜோதிகாவின் கள்ளக்காதலன் உடப்பன், தனது நண்பர் ஒருவருடன் சரவணன் வீட்டிற்கு வந்தார். ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த சரவணனை ஜோதிகாவுடன் சேர்ந்து உடப்பன், அவரது நண்பர் 3 பேரும் சரவனின் கழுத்தை அரிவாளால் கொடூரமாக அறுத்து கொலை செய்தனர். பின்னர் உடப்பனும், அவரது நண்பரும் அங்கிருந்து தப்பித்து சென்று விட்டனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த அலங்காநல்லூர் போலீசார், சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து கொலையுண்ட சரவணன் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் கள்ளக்காதலுடன் சேர்ந்து கணவரை தீர்த்து கட்டிய ஜோதிகாவை கைது செய்தனர்.

மேலும், போலீசார் அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. கேமரா காட்சிகளை ஆய்வு செய்து கொலை நடந்த சிறிது நேரத்திலேயே தப்பி ஓடிய உடப்பன் மற்றும் அவரது நண்பர் மதுரை கருப்பாயூரணி, கல்மேட்டை சேர்ந்த சிவா (18) ஆகிய இருவரையும் கைது செய்தனர். தகாத உறவால் கள்ளக்காதலனுடன் சேர்ந்து கணவரை கொடூரமாக கொலை செய்த மனைவியை போலீசார் கைது செய்துள்ள நிலையில் அவரது இரண்டு குழந்தைகளும் ஆதரவற்ற நிலையில் தவிக்கிறது.

# அரசு பள்ளிகளை மேம்படுத்த ரூ.745 கோடி நிதி ஒதுக்கீடு: அரசாணை வெளியீடு

சென்னை, அக். 31

தமிழக அரசின் 202425ம் நிதியாண்டு பட்ஜெட்டில், 'தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவரும் தலைசிறந்த கல்வியாளருமான பேராசிரியர் அன்பழகன் நூற்றாண்டை முன்னிட்டு, பள்ளிக்கல்வி வளர்ச்சிக்கென ரூ.7,500 கோடி மதிப்பில் பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டு திட்டம் என்றமாபெரும்திட்டத்தை 5 ஆண்டுகளில் செயல்படுத்த அரசால் அறிவிக்கப்பட்டு, ரூ.2 ஆயிரத்து 497 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிதியாண்டிலும் ரூ.1,000 கோடி மதிப்பில் பள்ளி கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படும்' என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக, முதல்கட்டமாகநடப்புகல்வியாண்டு 440 அரசு மேல்நிலைப்பள்ளிகளில், 3 ஆயிரத்து 32 கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறைகள், குடிநீர் வசதி, சுற்றுச்சுவர் அமைப்பதற்காக ரூ.745 கோடியே 27 லட்சத்து 47 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்து பள்ளிக் கல்வித்துறை செயலாளர் மதுமதி அரசாணை பிறப்பித்துள்ளார்.

நபார்டு வங்கியின் ரூ.633 கோடியே 48 லட்சத்து 16 ஆயிரம் கடனுதவி மற்றும் அரசின் ரூ.111 கோடியே 79 லட்சத்து 12 ஆயிரம் நிதி ஒதுக்கீட்டில் அரசு பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட உள்ளன.

# உறவுக்கார வாலிபருடன் மகள் ஓட்டம்... மன வேதனையில் தாய் எடுத்த விபரீத முடிவு

தஞ்சாவூர், அக்.31

தஞ்சை மாவட்டம் திருச்சிற்றம்பலம் அருகில் உள்ள ஒட்டங்காடு தெற்கு பெரிய தெற்குக்காடு கிராமத்தை சேர்ந்தவர் ரெங்கசாமி. இவரது மனைவி விஜயலதா. இவர்களுக்கு ஒரு மகனும், மகளும் உள்ளனர். ரெங்காசாமியின் மகள் அதே பகுதியை சேர்ந்த தனது உறவுக்கார வாலிபர் ஒருவரை காதலித்து வந்துள்ளார்.

சம்பவத்தன்று அந்த இளம்பெண் தனது காதலருடன் ஓடி போனதாக கூறப்படுகிறது. இதுகுறித்து தகவல் அறிந்த விஜயலதா தனது மகளை அழைத்துச் சென்ற அந்த வாலிபர் வீட்டுக்கு நேரில் சென்று பார்த்தார். அப்போது வீடு பூட்டி இருந்தது. இதனால் விரத்தி அடைந்த விஜயலதா, அதே வீட்டின் முன்பு விஷம் குடித்தார்.

இது குறித்து தகவல் அறிந்த ரெங்கசாமி மற்றும் அவரது உறவினர்கள் உடனடியாக விஜயலதாவை பேராவூரணி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். தொடர்ந்து மேல் சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால் சிகிச்சை பலனின்றி விஜயலதா பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து திருச்சிற்றம்பலம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். உறவுக்கார வாலிபருடன் மகள் ஓடி போனதால் மன வேதனையில் தாய் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## மாநாட்டில் விஜய் ஆக்ரோஷமாக பேசியது ஆச்சரியங்களை தந்திருக்கிறது நடிகை ராதிகா



கோவை, அக்.31

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் நேற்று முன்தினம் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு பல தடைகளை தாண்டி வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது. 5 லட்சத்துக்கும் அதிகமான தொண்டர்கள் கூடியதைக் கண்டு, கட்சியின் தலைவர் விஜய் மேடையிலேயே கண் கலங்கினார்.

திரண்டிருந்த தொண்டர்கள் மத்தியில் 45 நிமிடங்கள் பேசிய விஜய், மக்கள் தனிப்பெரும்பான்மையுடன் 100 சதவீதம் வெற்றி பெற வைப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. என்றாலும், நம்மை நம்பி கூட்டணிக்கு வருவோருக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்களிப்பு வழங்கப்படும் என்று அறிவித்தார். விஜய்யின் இந்த பேச்சுக்கு பல்வேறு அரசியல்கட்சிகளைசேர்ந்த தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் நடிகர் விஜயின் பேச்சு குறித்து தனது கருத்தினை பதிவு செய்திருக்கிறார் நடிகையும் அரசியல் தலைவருமான ராதிகா சரத்குமார். பாஜக சார்பில் கோவையில் நடை பெற்ற விழா ஒன்றில் வானதி சீனிவாசனோடு பங்கேற்ற நடிகை மற்றும் அரசியல் தலைவர் ராதிகா சரத்குமார் தளபதி விஜயின் மாநாடு குறித்து சில விஷயங்களை கூறி உள்ளார்.

விஜய் தனியாக கட்சியை தொடங்கியிருப்பதற்கு என்னுடைய மனதாரவாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அனைவருமே அரசியலுக்கு மக்களுக்கு நன்மை செய்யத் தான் வருகிறார்கள். அதை அவர்களுடைய கொள்கைகளுக்கு ஏற்ப செய்வது நல்லது தான். தமிழ் சினிமாவில் மிகச்சிறந்த நட்சத்திரமாக திகழ்ந்து வரும் அவர் அரசியலுக்கு வர வேண்டும் என்று முடிவு செய்தது மிகச் சிறந்த முடிவு தான்.

சிறுவயதில் இருந்து எனக்கு விஜய் தெரியும், அவருடைய தந்தையின் இயக்கத்தில் நான் பல திரைப்படங்களில் நடித்திருக்கிறேன். ஆகையால் இன்று அவர் இந்த வயதில் இப்படி ஒரு முடிவை எடுத்து இருப்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

மேலும் திமுகவை நேரடியாகவும், அதிமுகவைப் பற்றி எதுவும் பேசாமலும், பாஜகவை மறைமுகமாகவும் தாக்கி விஜய் பேசியது குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு..

"அவர் யோசித்து தான் அனைத்து விஷயங்களையும் பேசுவார். அப்படித் தான் திமுகவை நேரடியாக எதிர்த்து பேசி இருக்கிறார். ஆனால் பாஜகவை எதிர்த்து பேசுவதற்கு முன் கட்டாயம் அவர் யோசித்து தான் பேசுவார். அதிமுகவை பற்றி அவர் ஏன் பேசவில்லை என்பது எனக்கு தெரியவில்லை. அரசியலை அவர் வேறு விதமாகத்தான் பார்த்து வருகிறார். தெறி படத்தில் அவரோடு நான் நடித்திருக்கிறேன், அவர் பொதுவெளியில் பெருசாக பேசக்கூட மாட்டார். ஆனால் நேற்று நடந்த அந்த மாநாட்டு மேடையில் அவர் அவ்வளவு ஆக்ரோஷமாக பேசியது எனக்கு ஆச்சரியங்களை தந்திருக்கிறது. அடுத்து தனது கட்சிக்காரர்களை அடையாளம் காட்டி என்ன செய்யப்போகிறார் என்பதை பார்ப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்

## முத்துராமலிங்க தேவருக்கு அரங்கம்: முதல்அமைச்சருக்கு கருணாஸ் நன்றி



சென்னை, அக். 31

முக்குலத்தோர் புலிப் படை தலைவர் கருணாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

முத்துராமலிங்க தேவர் நினைவை போற்றும் வண்ணம், அக்டோபர் 30ந் தேதி தேவர் ஜெயந்தி விழாவை தமிழ்நாடு அரசு விழாவாக கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜெயந்தி விழா நடைபெறும் சூழலில் அவரது நினைவிடம் அருகில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான தற்காலிக பந்தல் அமைக்கப்பட்டு வந்தது. அது தற்போது தமிழ்நாடு அரசால் நிரந்தர அரங்கமாக மாறி இருப்பது பாராட்டுக்குரியது. ரூ.1 கோடியே 55 லட்சத்து 34 ஆயிரம் செலவில் மக்கள் நலன் கருதி முத்துராமலிங்க தேவர் அரங்கம் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அரங்கத்தை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (நேற்று) காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார். எனவே முதல்அமைச்சருக்கு எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அனைவரின் வாழ்விலும் ஒளியேற்றும் நாளாக தீபாவளி அமையட்டும் அண்ணாமலை வாழ்த்து



சென்னை, அக். 31

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது;

"பட்டாசு வெடிப்பது நம்ம கலாச்சாரம். நம் மக்களின் வாழ்வாதாரம். நம் சிவகாசியின் ஒட்டுமொத்த பொருளாதாரம்.

நம் மகிழ்ச்சிக்காகப் பட்டாசு தயாரிக்கும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்காக, நாம் அனைவரும், நம்மால் முடிந்த அளவுக்குப் பட்டாசு வாங்கி வெடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்தாப்புக்களின் வெளிச்சம் போல, இந்த தீபாவளிப் பண்டிகை, அனைவரின் வாழ்விலும் ஒளி ஏற்றும் தீபாவளியாக அமையட்டும். அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!"

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மதுரை: 15 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த வாலிபருக்கு ஆயுள் தண்டனை

திண்டுக்கல், அக்.31

மதுரை கே.புதூரை சேர்ந்தவர் காளிதாஸ் (வயது 27). கடந்த 2021ம் ஆண்டு இவர், 15 வயது சிறுமியை காதலிப்பதாக ஆசைவார்த்தை கூறி கடத்திச்சென்று பாலியல் வன்கொடுமை செய்தார். இதுகுறித்து சிறுமியின் பெற்றோர் கொடுத்த புகாரின் பேரில், காளிதாஸ் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வத்தலக்குண்டு போலீசார் வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர்.

மேலும் அவர் மீது திண்டுக்கல் போக்சோ சிறப்பு கோர்ட்டில் வழக்கும் தொடர்ந்தனர். பல்வேறு கட்டங்களாக நடந்து வந்த இந்த வழக்கு விசாரணை நேற்று நிறைவடைந்தது. குற்றம் சாட்டப்பட்ட காளிதாசுக்கு ஆயுள் தண்டனை, ரூ.1 லட்சத்து 15 ஆயிரம் அபராதம் விதித்து நீதிபதி வேல் முருகன் தீர்ப்பளித்தார்.

## நீர்வரத்து சீரானது: கும்பக்கரை அருவியில் குளிக்க அனுமதி

தேனி, அக்.31

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் இயற்கை எழில்கொஞ்சும் வகையில் கும்பக்கரை அருவி உள்ளது. இந்த அருவியில் குளிப்பதற்காக தேனி மாவட்டம் மட்டுமின்றி மதுரை, திண்டுக்கல் உள்பட வெளி மாவட்டங்களில் இருந்தும், கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலா பயணிகளும் வருகை தருகின்றனர்.

கும்பக்கரை அருவியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த வாரம் கனமழை கொட்டித்தீர்த்தது. இதனால் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. தொடர்ந்து நீர்வரத்து அதிகமாகவே இருந்தது. இதனால் பாதுகாப்பு கருதி கடந்த 20ந்தேதி முதல் அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது.

இந்தநிலையில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழைப்பொழிவு குறைந்தது. இதனால் கும்பக்கரை அருவிக்கு நீர்வரத்தும்சீரானது. இதையொட்டி நேற்றுமுதல்கும்பக்கரை அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. 8 நாட்களுக்கு பிறகு குளிக்க அனுமதி வழங்கப்பட்டதால் நேற்று கும்பக்கரை அருவிக்கு வந்திருந்த ஏராளமான சுற்றுலா பயணிகள் ஆனந்த குளியல் போட்டனர்.

## விஜய் பேசியது சினிமா வசனம் போல் தான் தெரிகிறது: ப.சிதம்பரம் கருத்து



சென்னை, அக்.31

பாசிசம், பாயாசம் என்று விஜய் பேசியது சினிமா வசனம் போல் தான் தெரிகிறது என்று ப.சிதம்பரம் கூறினார்.

சென்னை தியாகராய நகரில் முன்னாள் மத்திய மந்திரி ப.சிதம்பரம் நிருபர்களிடம் கூறியதாவது:

விஜய் நடத்திய மாநாட்டில் அவர் பேசியதில் சில மகிழ்ச்சி தருகிறது. சில வாசகங்கள் மகிழ்ச்சி தரவில்லை. எதுவாக இருந்தாலும் அவர் கட்சி தொடங்கியுள்ளார். அவருக்கு எனது வாழ்த்துக்கள். தமிழக அரசியலில் ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு என்பதை தேர்தல் தான் முடிவு செய்யும். ஆட்சியிலும், அதிகாரத்திலும் பங்கு என்பதை இப்போது எப்படி சொல்ல முடியும்?.

ஒரு காலத்தில் மத்தியில் தனிக்கட்சி தான் ஆட்சி செய்ய வேண்டும் என்றுதான் இருந்தது. 1996க்கு பிறகு பல கட்சிகள் ஆட்சி செய்கிறது. சாத்தியமில்லாதது எல்லாம் ஒரு காலத்தில் சாத்தியம் ஆகலாம். எனவே, இதுகுறித்து போகப்போகத் தான் சொல்ல முடியும். பாசிசம், பாயாசம் என்று விஜய் பேசியது சினிமா வசனம் போல் தான் தெரிகிறது. சினிமா வசனத்தை எல்லாம் கொள்கையாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## 'லப்பர் பந்து' படத்தை பாராட்டிய இயக்குநர் கார்த்திக் சுப்பராஜ்




கனா, எப்.ஐ.ஆர் படங்களில் இணை இயக்குனர் மற்றும் நெஞ்சுக்கு நீதி படத்திற்கு வசனம் எழுதிய தமிழரசன் பச்சமுத்து இயக்குனராக அறிமுகமாகும் திரைப்படம் 'லப்பர் பந்து'. இப்படத்தை சர்தார், காரி, ரன்பேபிரன் உள்ளிட்ட படங்களை தயாரித்த பிரின்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இப்படத்தில் ஹரிஷ் கல்யாண் மற்றும் அட்டகத்தி தினேஷ் இணைந்து கதாநாயகர்களாக நடித்துள்ளனர். சுவாசிகா விஜய் மற்றும் வதந்தி வெப் தொடரின் மூலம் பிரபலமடைந்த சஞ்சனா கிருஷ்ணமூர்த்தி கதாநாயகிகளாக நடித்துள்ளனர். மேலும் தேவதர்ஷினி, பால சரவணன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்த படத்துக்கு ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார். தினேஷ் புருஷோத்தமன் ஒளிப்பதிவு செய்துள்ளார். பியார் பிரேமா காதல் படத்தில் கதாநாயகனாக நடித்து பிரபலமானவர் நடிகர் ஹரிஷ் கல்யாண். இந்தாண்டின் சிறந்த படங்களில் ஒன்று என ரசிகர்களிடமிருந்து பாராட்டுகளும் கிடைத்துள்ளன. கிரிக்கெட்டை மையமாக வைத்து குடும்ப படமாகவும் இது உருவாகியுள்ளதால் அனைத்து தரப்பு ரசிகர்களையும் கவர்ந்துள்ளது.

ஹரிஷ் கல்யாண் இந்த திரைப்படத்தில் அன்பு என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். 'லப்பர் பந்து' திரைப்படம் கடந்த செப்டம்பர் 20ம் தேதி திரையரங்குகளில் வெளியானது. மேலும் பல்வேறு தரப்பினரும் இந்த படத்தை பாராட்டி வருகின்றனர்.

இந்நிலையில் லப்பர் பந்து படத்திற்கு இயக்குநர் கார்த்திக் சுப்பராஜ் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், "லப்பர் பந்து திரைப்படம் அழகான நடிப்பு திறனால் உருவாக்கப்பட்ட, மகிழ்ச்சி அடைய செய்த சிறப்பான திரைப்படம். கெத்து மற்றும் மைதானத்தில் அவருக்கு உருவாக்கப்பட்ட பில்டுஅப்களை ரசித்தேன். அறிமுக படத்தை சிறப்பாக வழங்கிய தமிழரசன் பச்சமுத்துவுக்கு வாழ்த்துக்கள். படத்தில் நடித்த தினேஷ், ஹரிஷ் கல்யாண், ஸ்வாசிகா, சஞ்சனா, காளி வெங்கட், பால சரவணன், இசையமைப்பாளர் ஷான் ரோல்டன், ஒளிப்பதிவாளர் தினேஷ்குமார் புருஷோத்தமன், பிரின்ஸ் பிக்சர்ஸ் மற்றும் ஒட்டுமொத்த படக்குழுவுக்கும் வாழ்த்துக்கள்," என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஓ.டி.டி.யில் வெளியாகும் 'அந்தகன்' திரைப்படம்



'வைகாசி பொறந்தாச்சு' என்ற படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் கதாநாயகனாக அறிமுகமானவர் பிரசாந்த். இவர் 90களின் காலகட்டத்தில் கொடிகட்டிப் பறந்த முன்னணி நடிகர்களில் ஒருவர். நீண்ட இடைவேளைக்கு பிறகு இவர் கதாநாயகனாக நடித்துள்ள திரைப்படம் 'அந்தகன்'. பாலிவுட்டில் ஸ்ரீராம் ராகவன் இயக்கத்தில் வெளியாகி பிளாக்பஸ்டர் ஹிட்டான 'அந்தாதுன்' படத்தின் ரீமேக்காக 'அந்தகன்' திரைப்படம் உருவாகியுள்ளது. இந்த படத்தில் சிம்ரன், வனிதா, இயக்குனர் கே.எஸ்.ரவிக்குமார், யோகிபாபு, பிரியா ஆனந்த், சமுத்திரக்கனி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

பிரசாந்தின் தந்தை தியாகராஜன் இயக்கியுள்ள இந்த படத்துக்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார். கிரைம் திரில்லர் கதைக்களத்தில் இப்படம் உருவாகி உள்ளது. அதே சமயம் நடிகர் பிரசாந்த் நீண்ட இடைவெளிக்கு பிறகு அந்தகன் படத்தின் மூலம் தரமான கம்பேக் கொடுத்துள்ளார். நடிகை சிம்ரன் படத்தில் வில்லியாக நடித்து மிரட்டியுள்ளார். கடந்த ஆகஸ்ட் மாதம் வெளியான இப்படம் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்த நிலையில் தற்போது இப்படத்தின் ஓ.டி.டி ரிலீஸ் குறித்த தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி இப்படம் வருகிற 30ந் தேதி அமேசான் பிரைம் ஓ.டி.டி. தளத்தில் வெளியாக உள்ளது.

## பாகுபலிக்கு பின்னர் தீபிகா படுகோனுடன் நடிக்க வாய்ப்பு: மறுத்த பிரபாஸ் ஏன் தெரியுமா?



தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகராக உள்ளவர் பிரபாஸ். இவர் கடந்த 2002ம் ஆண்டு வெளியான ஈஸ்வர் படத்தின் மூலம் நடிகராக அறிமுகமானார். அதனைத்தொடர்ந்து 2004ம் ஆண்டு வெளியான வர்ஷம் படம் இவருக்கு பெயரை வாங்கி கொடுத்தது.

பின்னர், சத்ரபதி, ரிபெல் என பல வெற்றிப்படங்களை கொடுத்தார். அதனையடுத்து, ராஜமவுலி இயக்கத்தில் பிரபாஸ் நடித்த படம் பாகுபலி. இப்படத்தின் மூலம் இவர் இந்தியா முழுவதும் பிரபலமடைந்தார். இப்படத்தின் வெற்றிக்குப் பின்னர் தீபிகா படுகோனுடன் நடிக்க பிரபாசுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது ஆனால், அதனை பிரபாஸ் மறுத்திருக்கிறார்.

சஞ்சய் லீலா பன்சாலி இயக்கத்தில் கடந்த 2018ம் ஆண்டு வெளியாகி மிகப்பெரிய வெற்றி பெற்ற படம் 'பத்மாவத்'. இப்படத்தில், தீபிகா படுகோன், ரன்வீர் சிங் மற்றும் சாஹித் கபூர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். இத்திரைப்படத்தில் சாஹித் கபூர் நடித்த, ராஜபுத்திர மன்னரான மகாராவல் ரத்தன் சிங்கின் கதாபாத்திரம் முதலில் பிரபாசுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனால், பிரபாஸ் அதை மறுத்திருக்கிறார். பிரபாஸ் அப்போது பாகுபலி 2 படப்பிடிப்பில் பிசியாக இருந்ததாகவும், பாகுபலி கதாபாத்திரத்தைப்போல இந்த பாத்திரம் தனித்து நிற்கும் பாத்திரமாக இல்லை என்பதற்காகவும் இப்படத்தில் நடிக்க பிரபாஸ் மறுத்ததாக கூறப்படுகிறது.


## ஐ.பி.எல்: பெங்களூரு அணியின் கேப்டனாக மீண்டும் விராட் கோலி ?



10 அணிகள் பங்கேற்கும் 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு (2025) மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் நடக்கிறது. இந்த போட்டிக்கான வீரர்களின் மெகா ஏலம் நவம்பர் கடைசி வாரத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஏலத்துக்கு முன்பாக ஒவ்வொரு அணியும் 6 வீரர்கள் வரை தக்க வைத்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் அணியில் தக்கவைத்துக்கொள்ளும் வீரர்கள் விபரங்களை அறிவிக்க வரும் நாளை கடைசி நாளாகும். இதனால் ஒவ்வொரு அணியும் எந்தெந்த வீரர்களை தக்கவைத்துக்கொள்ளும் என்ற பெரிய எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், பெங்களூரு அணியில் விராட் கோலி தக்க வைக்கப்பட்டுள்ளதாக அறிவிப்பு வெளியாகி உள்ளது. மேலும் அவரே பெங்களூரு அணியின் கேப்டனாக தேர்வு செய்ய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஐபிஎல் 2021ல் பெங்களூரு கேப்டன் பதவியில் இருந்து கோலி விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது,

## பார்டர்கவாஸ்கர் டிராபி; இந்திய அணியில் ஷமி இல்லாதது பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும் டிம் பெய்ன்



இந்திய கிரிக்கெட் அணி வரும் நவம்பர் மாதம் ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் (பார்டர்கவாஸ்கர் டிராபி) ஆட உள்ளது. இந்த தொடர் நவம்பர் 22ம் தேதி தொடங்குகிறது.

காலம் காலமாக தோல்விகளை மட்டுமே சந்தித்து வந்த இந்தியா 2018/19ம் ஆண்டு முதல் முறையாக விராட் கோலி தலைமையில் ஆஸ்திரேலிய மண்ணில் தொடரை வென்றது. அதே போல 2020/21 தொடரில் ரகானே தலைமையில் இந்தியா 2 1 என்ற கணக்கில் மீண்டும் ஆஸ்திரேலிய மண்ணில் கோப்பையை வென்றது.

ஆஸ்திரேலியாவில் வைத்து அந்த அணியை தொடர்ந்து மூன்றாவது முறையாக டெஸ்ட் தொடரில் இந்தியா வீழ்த்துமா? என ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்து கொண்டுள்ளனர். இந்நிலையில், இம்முறை கண்டிப்பாக ஆஸ்திரேலியா வெல்லும் என ஆஸ்திரேலிய முன்னாள் கேப்டன் டிம் பெய்ன் தெரிவித்துள்ளார். இது பற்றி சமீபத்திய பேட்டியில் அவர் கூறியதாவது,

ஆஸ்திரேலியா வெல்லும் அணியாக தொடரை துவங்கும். இந்தியா நன்றாக விளையாடவில்லை என்று நினைக்கிறேன். அவர்களின் பேட்டிங் கொஞ்சம் உடையக்கூடியதாக இருக்கிறது. அதே சமயம் ஆஸ்திரேலியாவின் பேட்டிங் வெளியீடுகள் அடிப்படையில் ஆச்சரியமாக தெரியவில்லை. ஆனால் அவர்கள் தரத்தை பெற்றுள்ளனர் என்பதை எங்களுக்குத் தெரியும்.

அவர்களிடம் ஷமி இல்லாதது பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும். அதனால் பும்ரா தனது தோளில் அதிக பாரத்தை சுமக்க நேரிடும். அவர் காயத்தை சந்தித்தால் இன்னும் பின்னடைவு ஏற்படலாம். நியூசிலாந்து அணி அந்தளவுக்கு தரமாக செயல்படவில்லை. இருப்பினும் அவர்கள் நம்ப முடியாத செயல்பாடுகளை வெளிப்படுத்தினார்கள் என்பதில் சந்தேகமில்லை. அது இந்தியாவை கொஞ்சம் கவலையடைய வைத்திருக்கும் என்பதை உண்மையாகும்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஷமி இல்லாமல் அவர்கள் ஆத்திரேலியாவுக்கு வர உள்ளனர். அதே சமயம் இந்தியாவின் தவறுகளை பயன்படுத்தி தங்களுடைய சிறந்த செயல்பாடுகளை வெளிப்படுத்தி நியூசிலாந்து வெற்றி பெற்றுள்ளது. அந்தத் தொடரில் இந்தியா நிறைய தவறுகள் செய்தது என்று நினைக்கிறேன். மறுபுறம் நியூஸிலாந்து கேட்ச்களை அற்புதமாக பிடித்து வென்றது. அவர்களுக்கு தலை வணங்குகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## வாய்ப்பை தவறவிட்ட ரொனால்டோ..தொடரிலிருந்து வெளியேறியது அல்நாசர் அணி



கிங் கோப்பை சாம்பியன்ஸ் கால்பந்து,தொடரில் நேற்று நடைபெற்ற காலுறுதிக்கு முந்தைய சுற்று போட்டியில் அல்நாசர் அல் தாவூன் அணிகள் மோதின. ரியாத்தில் நடந்த இந்த போட்டியில் அல் தாவூன் அணியின் வலீத் அகமது 71வது நிமிடத்தில் கோல் அடித்தார் . இதனால் அந்த அணி 10 என முன்னிலை பெற்றது .

பின்னர் அல்நாசர் அணிக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. ஆனால் இதில் கோல் அடிக்கும் வாய்ப்பை ரொனால்டோ தவற விட்டார் . இதனால் அல் தாவூன் அணி ஆட்ட நேர முடிவில் 10 என வெற்றி பெற்றது. ரொனால்டோவின் அணி தொடரிலிருந்து வெளியேறியது

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.